# பாரதிதாசன் பல்கலைக்கழகம்

(தேசிய மதிப்பீட்டுத் தரநிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் “A+” தரச்சான்றிதழ் மூன்றாம் சுற்றில் பெற்றது)

**பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.**

**முனைவர் S. சீனிவாச இராகவன், M.A.,M.L.I.Sc.,Ph.D.**
**தேர்வு நெறியாளர் (பொ)**

அலுவலகம் : 0431-2407016, 2407060
தொலைப்படி : 0431-2407444
மின் அஞ்சல் : coe@bdu.ac.in
வலைத்தளம் : www.bdu.ac.in


---

ந.க. எண். 122/2020/UG&PG/நவம்பர் 2020 Date: 05 -12-2020

பெறுநர்

முதல்வர்
பாரதிதாசன் பல்கலைக்கழக
இணைவு பெற்ற கல்லூரிகள்(Non-Autonomous)

அய்யா/அம்மையீர்

பொருள்:இளநிலை மற்றும் முதுநிலை – நவம்பர் 2020 பருவத் தேர்வு - தொடர்பாக.

பார்வை: 1.துணைவேந்தர் அவர்களின் 1.12.2020 நாளிட்ட ஆணை.
2. இவ்வலுவலக க.ந.எண்:120/2020/UG/PG/நவம்பர் 2020 நாள்:1.12.2020.

* * * * * *

பார்வை-1ல் கண்டுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளபடி நவம்பர் 2020 பருவத்தேர்விற்கான புற மதிப்பீட்டுத் தேர்வுகள் 14.12.2020 அன்று இணையவழியாக நடைபெற உள்ளது. இத் தேர்வுகளை நடத்துவது தொடர்பாக கீழ்க்காணும் தகவல்கள் தெரிவிக்கப்படுகிறது.

1. கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக நவம்பர் 2020 இளநிலை மற்றும் முதுநிலை பாடங்களுக்கான அகத்தேர்வுகள் இரண்டு கட்டங்களாக நடைபெற்று முடிவடைந்த நிலையில் தற்போது ஒட்டு மொத்த அலகுகளுக்கும் (ஐந்து) சேர்த்து புறத்தேர்வுகளுக்கான எழுத்துத் தேர்வுகள் நடத்தப்பட உள்ளது. 10.12.2020 அன்று தொடங்கி நடைபெற இருந்த மூன்றாம் கட்ட அகத்தேர்வுகள் நடத்தப்படவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.
2. தேர்வுக் கட்டணம் தற்போது நடைமுறையில் உள்ளவாறே செலுத்தப்பட வேண்டும்.
3. 11.12.2020–க்குள் இணையதளம் வழியாக செலுத்தப்பட்ட E-ரசீதுடன் தேர்வுக் கட்டண சுருக்கப்பட்டியல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.
4. இளநிலை ஐந்தாம் பருவம் மற்றும் **MCA** ஐந்தாம் பருவ மாணவர்கள், ஏற்கனவே கல்லூரிப் படிப்பு முடித்து நிலுவைத்தாள்கள் வைத்துள்ள மாணவர்கள் மட்டும் நடப்பு பருவத்திற்குரிய பாடப்பிரிவுகளுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்தி உரிய விண்ணப்பங்கள் பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.
5. தற்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கர்கள் தங்களுடைய நிலுவைத்தாள்களை ஏப்ரல் 2020-ல் நடைபெற்ற தேர்வின் போது விண்ணப்பிக்காமல் இருந்தால் அவர்கள் உரிய தேர்வுக் கட்டணம் செலுத்தி பதிவு செய்ய வேண்டும்.
6. இளநிலைI,IIIபருவ மாணவர்கள் மற்றும் முதுநிலை முதல் மற்றும் மூன்றாம் பருவ மாணவர்கள் நடப்பு பருவ தாள்களுக்கு மட்டும் பதிவுகளை பல்கலைக்கழக Portal மூலம் பதிவேற்றம் செய்ய வேண்டும். இம்மாணவர்களுக்குரிய தேர்வுக் கட்டணங்களை மாணவர்களிடம் இருந்து பெற்று மொத்தமாக Online வழியாக செலுத்தி E-ரசீதுடன் தேர்வுக் கட்டண சுருக்கப்பட்டியல் பல்கலைக்கழகத்திற்கு அனுப்ப வேண்டும்.

7. தேர்வுகள் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை (3 மணி நேரம்) நடைபெறும்.
8. அந்தந்த பருவத்திற்குரிய செய்முறைத் தேர்வுகளுக்கும் உரிய கட்டணம் செலுத்த வேண்டும்.
9. செய்முறை தேர்வுகளை அந்தந்த கல்லூரிகளே அக மற்றும் புற தேர்வாளர்களை நியமித்து 12.12.2020 -க்குள் நடத்தி மதிப்பெண்களை பல்கலைக்கழக Portal-ல் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
10. வினாத்தாள்கள் தேர்வு தொடங்குவதற்கு ஒரு மணி நேரம் முன்பாக முற்பகல் 9 மணிக்கு கல்லூரி முதல்வர்களின் E-Mail முகவரிக்கு அனுப்பப்படும். மேலும் முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக வலைதளத்தின் வழியாகவும் அனுப்பப்படும்.
11. அந்தந்த கல்லூரி முதல்வரே தேர்வு முதன்மைக் கண்காணிப்பாளராகவும் தேர்வு விடைத்தாள் திருத்தும் முகாம் அலுவலராகவும் செயல்பட அனுமதி அளிக்கப்படுகிறது.
12. விடைத்தாள்களை மாணவர்கள் A4 அளவிலான கோடு போடாத வெள்ளைத்தாள்கள் பயன்படுத்தி தேர்வினை எழுதலாம்.
13. மாணாக்கர்கள் தத்தம் கல்லூரியில் விடைத்தாள்களை நேரில் அளிக்க வேண்டும். அவ்வாறு அளிக்க இயலாத மாணவர்கள் கல்லூரி முதல்வருக்கு அன்றைய தினமே தபால் வழியாக அனுப்ப வேண்டும். மாணாக்கர்கள் இதில் ஏதேனும் ஒரு முறையை மட்டும் பின்பற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.
14. மாணாக்கர்கள் எழுதியுள்ள விடைத்தாள்களை அந்தந்த கல்லூரி துறை ஆசிரியர்களே மதிப்பீடு செய்து மதிப்பெண்களை உடனடியாக பல்கலைக்கழக இணைய முகப்பில் (Portal) பதிவேற்றம் செய்ய வேண்டும.
15. மதிப்பீடு செய்யப்பட்ட விடைத்தாள்களை கல்லூரியில் இருந்து பல்கலைக்கழகம் நேரிடையாக பெற்றுக் கொள்ளும்..
16. தேர்வு நடத்துவதற்கான ஊதியங்கள் மற்றும் மதிப்பீட்டு ஊதியங்கள் பல்கலைக்கழக விதிமுறைகளின்படி வழங்கப்படும்.
17. விரிவான தேர்வு கால அட்டவணை பல்கலைக்கழக இணையதளம் வழியாக வெளியிடப்படும்.
18. இளநிலைப் பட்டப்படிப்பில் முதல் பருவத்தில் பகுதி-2ல் ஆங்கிலம் மொழிக்கான இரண்டு தாள்களும் தற்போது நடைமுறையில் அமைந்துள்ள Pattern முறையில் தேர்வு நடைபெறும். அப்பாடங்களுக்கான அகத்தேர்வுகளை அந்தந்த கல்லூரிகளே நடத்தி பல்கலைக்கழக Portal மூலம் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே, கல்லூரி முதல்வர்களும் துறை ஆசிரியர்களும் இத்தேர்வுகளை சிறப்புடன் நடத்திட ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் உண்மையுள்ள

தேர்வு நெறியாளர்(பொ)

நகல்:
1. பதிவாளர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24
2. துணைவேந்தர் அவர்களின் நேர்முக உதவியாளர்,பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24.
3. தேர்வு நெறியாளரின் நேர்முக உதவியாளர் பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24.
4. துணைப்பதிவாளர், இளநிலை தேர்வுப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ,திருச்சி-24.
5. உதவிப் பதிவாளர், இளநிலை தேர்வுப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம் ,திருச்சி-24.
6. உதவிப் பதிவாளர், முதுநிலை தேர்வுப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24.
7. உதவிப் பதிவாளர், மந்தனப் பிரிவு-1, தேர்வு நெறியாளர் அலுவலகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி-24.
8. கணினிப் பிரிவு, பாரதிதாசன் பல்கலைக்கழகம் திருச்சராப்பள்ளி-24.
9. Stock File .